# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 268 | 4 Pages | 1.5.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 268 | 4 பக்கங்கள் | 1.5.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# ஜூன் 4ந் தேதிக்கு பிறகு தி.மு.க. அ.தி.மு.க.வில் அதிரடி மாற்றங்கள்



சென்னை, மே.1

தமிழகத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜனதா மற்றும் நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகளுக்கு இடையே 4 முனை போட்டி ஏற்பட்டது.

இப்போது ஒவ்வொரு கட்சியிலும் எந்தெந்த தொகுதியில் வெற்றி வாய்ப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்று சர்வே எடுத்து வைத்துள்ளனர்.தி.மு.க.தலைவர்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால் உளவுத்துறை ரிப்போர்ட் அவரிடம் ஏற்கனவே வழங்கப்பட்டு இருக்கிறது. அதே போல் தி.மு.க.வுக்கு சொந்தமான தேர்தல் வியூக நிறுவனமும் ஒரு சர்வே எடுத்து வழங்கி உள்ளது. அதில் தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று கூறப்பட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்து வருகின்றனர். அதன் காரணமாகவே தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை கூட்டணி கட்சித் தலைவர்கள் மரியாதை நிமித்தமாக சென்று பார்த்து வாழ்த்து தெரிவித்துள்ளனர். இவர்கள் மட்டுமின்றி வேட்பாளர்களும் வாழ்த்து தெரிவித்து உள்ளனர். ஆனாலும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் இதில் இன்னும் முழு திருப்தி அடையாமல் உள்ளதாக தகவல் வெளியாகி வருகிறது. காரணம் கடந்த 2019 பாராளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்களோ அதைவிட இந்த தேர்தலில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தான் தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்று நினைக்கிறார்.

இதற்கு காரணம் தி.மு.க.வில் நிறுத்தப்பட்ட வசதியான சீனியர் வேட்பாளர்கள் பலர் முழுமையாக பணம் செலவழிக்காமல் கட்சிக்காரர்களை செலவழிக்க வைத்துவிட்டனர். இதில் பல கட்சிக்காரர்களுக்கு கடன் சுமை ஏற்பட்டுவிட்டது. இதனால் தி.மு.க. நிர்வாகிகளே சில வேட்பாளர்கள் மீது அதிருப்தியில் உள்ளனர். தேர்தலுக்கே இவர் பணம் செலவழிக்கவில்லை. ஜெயித்த பிறகு நமக்கு என்ன செய்துவிட போகிறார் என்ற விரக்தியில் பேச ஆரம்பித்துள்ளனர். இதுபற்றிய புகார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரை சென்றுள்ளது. அவரும் தேர்தல் முடிவு வரட்டும். அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று பொறுமையாக உள்ளார். ஏற்கனவே தொகுதி வாரியாக தேர்தல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்ததால் அவர்களும் அறிக்கை தயாரித்து மேலிடத்துக்கு வழங்கி இருக்கிறார்கள். அதில் யார்யார் சரிவர பணியாற்றவில்லை. முழுமையான அர்ப்பணிப்புடன் யார்யார் பணியாற்றினார்கள் என்ற விவரங்களையும் அதில் குறிப்பிட்டு உள்ளனர்.

கடந்த தேர்தலை போல் லீடிங் அதிகமாக இருக்காது என்றும் தெரிவித்துள்ளனர். எனவே எந்த தொகுதியில் ஓட்டு குறைந்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் தி.மு.க.வில் ஏற்பட்டு உள்ளது. எனவே ஜூன் 4ந் தேதிக்கு பிறகு தி.மு.க. வில் அதிரடி மாற்றங்கள் இருக்கும் என்று கட்சி நிர்வாகிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர். அ.தி.மு.க.வில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாடு முழுவதும் சுற்றி பிரசாரம் செய்திருந்தாலும் சில மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் வேட்பாளர்களுக்கு சரிவர ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் அவரது கவனத்துக்கு வந்துள்ளது. அ.தி.மு.க. வேட்பாளர்களை அழைத்துச் சென்று ஓட்டுக் கேட்க வேண்டியது அந்தந்த மாவட்டச் செயலாளரின் கடமையாகும். இதற்காக எந்தெந்த பகுதிக்கு எப்போது செல்ல வேண்டும் என்று அட்டவணை தயாரித்து அதன்படி கட்சி நிர்வாகிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இந்த பணியை கூட சில மாவட்டச் செயலாளர்கள் சரிவர செய்யவில்லை என்று ஒன்றிய செயலாளர்கள் தலைமைக் கழகத்துக்கு புகாராக அனுப்பி இருக்கிறார்கள். ஒவ்வொரு தொகுதியில் உள்ள பிரச்சினைகளையும் புகார்களையும் பட்டியலிட்டு அமைப்புச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சி.பொன்னையன் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் அறிக்கை சமர்ப்பித்து உள்ளதாக தெரிகிறது.

அ.தி.மு.க.வில் காஞ்சிபுரம், வட சென்னை, தென் சென்னை, கள்ளக்குறிச்சி உள்பட 15 தொகுதிகளின் வெற்றி வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில் மீதமுள்ள 25 தொகுதிகளில் உள்ள கள நிலவரம் பற்றி கலக்கத்துடனே உள்ளனர். அ.தி.மு.க.வுக்கு 2வது இடம் கிடைக்குமா? அல்லது 3வது இடத்துக்கு தள்ளப்படுமா? என்று பரவலாக பேசப்பட்டு வருகிறது. இதனால் ஜூன் 4ந்தேதி தேர்தல் முடிவு வந்த பிறகு அ.தி.மு.க.விலும் அதிரடி மாற்றங்கள் நிகழக் கூடும் என்று கட்சிநிர்வாகிகள்கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## வளர்ப்பு நாயை கொன்றதாக கூறி சர்ச்சையில் சிக்கிய பெண் கவர்னர்



காசா, மே.1

காசாவின் தெற்கு பகுதியான ரஃபா நகர் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் ஆறு பெண்கள், ஐந்து குழந்தைகள் அடங்குவார்கள். ஒரு குழந்தை பிறந்து ஐந்தே நாட்கள் ஆன நிலையில் உயிரிழந்துள்ளது.

எகிப்து நாட்டின் எல்லையோரம் உள்ள ரஃபா ஹமாஸ் அமைப்பினரின் கோட்டையாக திகழ்வதாக இஸ்ரேல் கூறி வருகிறது. இதனால் ரஃபா மீது தரைதாக்குதல் நடத்த ஆயத்தமாகி வருகிறது. ரஃபாநகரில் 10 லட்சத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் வசித்து வருகிறார்கள்.

காசா முனையில் உள்ள பெரும்பாலான மக்கள் ரஃபா நகருக்கு குடிபெயர்ந்து முகாம்களில் வசித்து வருகின்றனர். மனிதாபிமான பேரிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் ரஃபா மீது தரைவழி தாக்குதல் நடத்தக்கூடாது என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ஆண்டனி பிளிங்கன் சவுதி அரேபியா சென்றுள்ளனர். இவர் இஸ்ரேல் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. காசாவிற்கு மேலும் உதவிப் பொருட்கள் சென்றடைய இஸ்ரேல் வழிவகைசெய்யவேண்டும். இருந்தபோது ிலும், மனிதாபிமானநெருக்கடியை தணிக்க இரு தரப்பிலும் போர் நிறுத்தம் செய்து கொள்வது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

.........................................

## கென்யாவில் அணை உடைந்து ஊருக்குள் புகுந்த வெள்ளம்: 40 பேர் பலி



கென்யா, மே.1

கென்யாவின் மேற்கு பகுதியில் உள்ள கிரேட் ரிஃப்ட்; பள்ளத்தாக்கு மாகாணத்தில் அமைந்தள்ள பகுதி மாய் மஹியு. இங்கு ஓல்டு கிஜாப் என்ற அணை உள்ளது. இந்த அணி திடீரென்று உடைந்தது வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. இதில் வீடுகள் அடித்து செல்லப்பட்டன. மரங்களை வேறோடு சாய்த்து இழுத்துச் சென்றது. கார்கள் அடித்து செல்லப்பட்டன.

அணையில் இருந்து வெளியேறிய வெள்ளத்தால் சுமார் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் மத்தியில் இருந்து கென்யாவில் கனமழை பெய்து வருகிறது. அதிகமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் எச்சரித்திருந்தது, கனமழை காரணமாக அணை நிரம்பியிருந்தது.

கடந்த சனிக்கிழமை கென்யாவின் முக்கியமான விமான நிலையம் மழை வெள்ளத்தால் மூழ்கியது. ரன்வே மூழ்கியதால் பல விமானங்கள் திருப்பி விடப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கென்யாவில் 2 லட்சம் மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பள்ளிக்கூடங்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிய முகாம் அமைக்க கென்ய அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கிழக்க ஆப்பிரிக்க நாடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றன. தான்சானியாவில் கனமழை பெய்தது. இந்த மழைக்கு 155 பேர் உயிரிழந்தனர். புருண்டியில் 2 லட்சம் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

.........................................

## மின்சார குக்கரை 'ஆன்' செய்த பூனையால் தீப்பற்றி எரிந்த வீடு



சீனா, மே.1

தென்மேற்கு சீனாவில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஒரு வீட்டில் கடந்த 4ந்தேதி திடீரென தீப்பற்றி எரிந்தது. இது குறித்த தகவலின் பேரில் தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து சென்று போராடி தீயை அணைத்தனர். மேலும் தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தினர்.

அப்போது வீட்டில் இருந்த மின்சார குக்கரை வீட்டு உரிமையாளர் அணைத்து வைத்திருந்த நிலையில், வீட்டில் அவர் செல்லமாக வளர்த்த பூனை அந்த மின்சார குக்கரை 'ஆன்' செய்ததும், அதனால் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக வீட்டில் தீப்பிடித்ததும் தெரிய வந்தது.

அதிர்ஷ்டவசமாக இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றாலும், வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து நாசமானது. இதில் மொத்தம் ரூ.11.5 லட்சம் அளவுக்கு பொருட்கள் எரிந்து சேதமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்த தகவல்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி பயனர்கள் மத்தியில் பேசு பொருளாகி உள்ளது.

## நீலகிரி சுற்றுலா தலங்களை 39 ஆயிரம் சுற்றுலா பயணிகள் பார்வையிட்டனர்



ஊட்டி, மே1.

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. பகல் நேரங்களில் கடுமையான வெயில் நிலவுவதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியில் வரவே அச்சப்படுகின்றனர்.

அந்தளவுக்கு வெயிலின் உக்கிரம் இருக்கிறது. கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க பொது மக்கள் குளிர்ச்சியான காலநிலை நிலவக்கூடிய மலைபிரதேசங்களான ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளை நோக்கி செல்கின்றனர். மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டத்திற்கு கடந்த சில வாரங்களாக சுற்றுலா பயணிகள் வருகையானது அதிகரித்து காணப்படுகிறது. வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டம் அலைமோதி வந்தது. தற்போது பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டதை தொடர்ந்து குடும்பம், குடும்பமாக ஊட்டிக்கு வந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் அங்குள்ள தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தொட்டபெட்டா மலைசிகரம் உள்ளிட்ட சுற்றுலா தலங்களை கண்டு ரசித்து வருகிறார்கள். படகு இல்லத்தில் படகு சவாரி செய்தும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

முதுமலைக்கு சென்ற சுற்றுலா பயணிகள் அங்கு யானைகளுக்கு உணவு கொடுக்கும் நிகழ்ச்சியை கண்டு ரசித்தனர். நீலகிரியில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களிலுமே சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

நேற்று ஒரே நாளில் நீலகிரியில் உள்ள சுற்றுலா தலங்களை 39 ஆயிரத்து 23 சுற்றுலாபயணிகள் பார்வையிட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஊட்டி தாவரவியல் பூங்காவுக்கு 23 ஆயிரத்து 78 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளது. இதேபோல் காட்டேரி பூங்காவுக்கு 1,011 பேரும், தேயிலை பூங்காவுக்கு 1,100 பேரும், ரோஜா பூங்காவுக்கு 8 ஆயிரத்து 868 பேரும், குன்னூர் சிம்ஸ் பூங்காவுக்கு 4 ஆயிரத்து 680 பேரும், மரவியல் பூங்காவுக்கு 286 பேரும் வந்து பார்வையிட்டு சென்றுள்ளனர்.

## விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டரங்கத்தில் கோடைகால பயிற்சி



விழுப்புரம், மே.1

விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டரங்கத்தில் கோடைகால பயிற்சி விளையாட்டு முகாம் நடைபெறவுள்ளது மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு தங்களுடைய வியைாட்டு திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 29.04.2024 முதல் 13.05.2024 வரை கோடை கால பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சி முகாமில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும். தடகளம், கபடி, கைப்பந்து, மல்லர்கம்பம், வாலிபால், ஆகிய விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சி முகாமில் 18 வயதிற்குட்பட்டமாணவ/மாணவியர்கள் கலந்து கொள்ளலாம். காலை 6 மணி முதல் 8.30 மணி வரையும் மாலை 4.00 மணி முதல் 6.30 வரையும் பயிற்சியளிக்கப்படும்.

மேலும் பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்களுக்கு தினமும் வழங்கப்படும். பயிற்சி முகாமில் கலந்து கொள்ளுபவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பயிற்சி கட்டணம் ரூ.170+GST 30=ரூ.200 ஆகும். கட்டண தொகையினை மாவட்ட விளையாட்டு அரங்க அலுவலகத்தில் POS Machi



விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்ததை தொடர்ந்து, வாக்கு எண்ணும் மையமான விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் (Strong Room) வைக்கப்பட்டுள்ள 06 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கண்காணிப்பு மையத்திலிருந்து கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.



அமைச்சர்செஞ்சிமஸ்தான்.அவர்களின்ஆலோசனைப்படிமேல்மலையனூரில்உள்ளசெஞ்சிதொகுதிசட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மேல்மலையனூர் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினருமான L.P. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு கடும் வெப்பம் நிலவும் இந்த கோடை காலத்தில் மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்படாத வகையில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஆலோசனைகள் வழங்கினார்

# நீர்மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி: தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாதன் தொடங்கி வைத்தார்

தென்காசி, மே.1

கடையம் தெற்கு ஒன்றியம் இரவணசமுத்திரத்தில் மற்றும் வீரா சமுத்திரம் ஊராட்சி மாலிக் நகர் ஆகிய இரண்டு இடங்களில் மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஆதம் சுபேர் அவர்கள் ஏற்பாட்டில் அவரது தலைமையில் நீர்மோர் பந்தல் திற ப்பு விழா நிகழ்ச்சி நடை பெற்றது



நிகழ்ச்சிக்கு வீரா சமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் ஜீனத் பர்வீன் யாகூப் முதலியார்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மைதீன் பீவி ஹசன் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் வின்சென்ட் வடக்கு ஒன்றிய பொருளாளர் அகமது அஜித் மாலிக் நகர் செயலாளர் முகமது ஈசாக் ஆகியோர் முன்னிலை வைத்தனர் வருகை தந்த அனைவரையும் தகவல் தொழில்நுட்ப பணி மட்டும் அவர்கள் வரவேற்று பேசினார் தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினரும் சேர்வக்காரன்பட்டி ஊராட்சி மன்ற தலைவருமான ரவிச்சந்திரன் ஐக்கிய ஜமாத் பொருளாளர் செய்யது அபுதாஹிர் ஜமாத் ஆலோசகர் அலியப்பா தெற்கு ஒன்றிய அவை தலைவர் கே பி என் சேட் மாவட்ட கவுன்சிலர் மைதீன் பீவி விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கருணாநிதி மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியா ஜெய் சிங் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் முருகேசன் சுந்தரி மாரியப்பன் பேரூராட்சி கவுன்சிலர்கள் சக்தி சுப்பிரமணியன் சந்திரன் முஸ்லிம் லீக் அப்துல் காதர் காங்கிரஸ் பிரமுகர் கண்ணன் நவநீதகிருஷ்ணன் ஆலங்குளம் ஒன்றிய துணை சேர்மன் செல்வகொடி ராஜா மணி மாவட்ட பிரதிநிதி முகமது யாகூப் பெருமாள் சுல்தான் ஆரிப் பிச்சாண்டி செம்மாத்தி சுல்தான் ஆட்டோ சங்கத் தலைவர் திருமலை குமார் காளி ஆட்டோ ஐயப்பன் சுல்தான் கடையம் தெற்கு ஒன்றியம் இர வணசமுத்திரத்தில் மற்றும் வீரா சமுத்திரம் ஊராட்சி மாலிக் நகர் ஆகிய இரண்டு இடங்களில் மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஆதம் சுபேர் ஏற்பாட்டில் அவரது தலைமையில்... நீர்மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு வீரா சமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் ஜீனத் பர்வீன் யாகூப் முதலியார்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மைதீன் பீவி ஹசன் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் வின்சென்ட் வடக்கு ஒன்றிய பொருளாளர் அகமது அஜித் மாலிக் நகர் செயலாளர் முகமது ஈசாக் ஆகியோர் முன்னிலை வைத்தனர் வருகை தந்த அனைவரையும் தகவல் தொழில்நுட்ப பணி மட்டும் வரவேற்று பேசினார் தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ பத்மநாதன் தொடங்கி வைத்தார்கள் நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினரும் சேர்வக்காரன்பட்டி ஊராட்சி மன்ற தலைவருமான ரவிச்சந்திரன் ஐக்கிய ஜமாத் பொருளாளர் செய்யது அபுதாஹிர் ஜமாத் ஆலோசகர் அலியப்பா தெற்கு ஒன்றிய அவை தலைவர் கே பி என் சேட் மாவட்ட கவுன்சிலர் மைதீன் பீவி விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கருணாநிதி மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியா ஜெய் சிங் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் முருகேசன் சுந்தரி மாரியப்பன் பேரூராட்சி கவுன்சிலர்கள் சக்தி சுப்பிரமணியன் சந்திரன் முஸ்லிம் லீக் அப்துல் காதர் காங்கிரஸ் பிரமுகர் கண்ணன் நவநீத கிருஷ்ணன் ஆலங்குளம் ஒன்றிய துணை சேர்மன் செல்வ கொடி ராஜா மணி மாவட்ட பிரதிநிதி முகமது யாகூப் பெருமாள் சுல்தான் ஆரிப் பிச்சாண்டி செம்மாத்தி சுல்தான் ஆட்டோ சங்கத் தலைவர் திருமலை குமார் காளி ஆட்டோ ஐயப்பன் சுல்தான் இனாயத் ஆழ்வை மைதீன் பக்ரீத் காசியார் முதலியார்பட்டி கிளை நிர்வாகிகள் மைதீன் ஜமீன் அஸ்லீம் ஹக்கீம் சதாம் சேக் சலீம் நிஜாம் ஹாஜி இம்ரான் ஆஜிஸ் ஏ பி என் குணா ஐந்தாம் கட்டளை சுரேஷ் இளைஞர் அணி அசோக் நவீன் அருணா பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் பொதுமக்களுக்கு மோர் மற்றும் தர்பூசணி பழம் குடிநீர் வழங்கப்பட்டது

இறுதியில் கிளைச் செயலாளர் முகமது ஈசாக் அவர்கள் நன்றி கூறினார்கள் இனாயத் ஆழ்வை மைதீன் பக்ரீத் காசியார் முதலியார்பட்டி கிளை நிர்வாகிகள் மைதீன் ஜமீன் அஸ்லீம் ஹக்கீம் சதாம் சேக் சலீம் நிஜாம் ஹாஜி இம்ரான் ஆஜிஸ் ஏ பி என் குணா ஐந்தாம் கட்டளை சுரேஷ் இளைஞர் அணி அசோக் நவீன் அருணா பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் பொதுமக்களுக்கு மோர் மற்றும் தர்பூசணி பழம் குடிநீர் வழங்கப் பட்டதுஇறுதியில் கிளைச் செயலாளர் முகமது ஈசாக் நன்றி கூறினார்கள்

# பாலாற்று படுகை விவசாயிகள் முன்னேற்ற சங்க கூட்டம்

செங்கல்பட்டு, மே.1

செங்கல்பட்டு மாவட்டம் பாலூர் பிர்கா பாலாற்று படுகை விவசாயிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் வில்லியம்பாக்கம் பகுதியில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. தலைவர் தனசேகரன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் செயலாளர், பொருளாளர் என முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான விவசாயிகளும் கலந்துக்கொண்டனர்.



பாலூர் பிர்காவுக்கு உட்பட்ட வில்லியம்பாக்கம், ரெட்டிபாளையம், கொங்கனாஞ்சேரி, கொளத்தாஞ்சேரி, மேலச்சேரி, தேவனூர், ஆத்தூர், திம்மாவரம், ஆகிய கிராமத்தில் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் விவசாயம் செய்து வருகின்றனர். ஆண்டிற்க்கு இரண்டு போகம் விவசாயம் செய்து வரும் விவசாயிகள் வழக்கமாக ஒரு ஏக்கர் நெல் விவசாயம் செய்தால் 25 அல்லது 30 மூட்டைகள் நெல் மூட்டைகள் கிடைக்கும், ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு பாலாற்றில் கட்டிட தடுப்பணை காரணமாகவும் சில மாதங்களுக்கு முன்பு பெய்த கன மழை வெள்ள பெருக்கு காரணமாகவும், நெல் விவசாயத்திற்க்கு தண்ணீர் பாசம் கிடைத்துள்ளதால் ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்தால் 40 மூட்டைகள் நெல் கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகம் ஏற்க்கனவே ஏக்கருக்கு 30 மூட்டைகளை மட்டுமே கொள்முதல் செய்து வருகின்றனது வரும் குறுவை சாகுபடி ஆகஸ்ட் மாதத்தில் இருந்து ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைகளை மாவட்ட நிர்வாகம் கொள்முதல் செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் விவசாயிகளுக்கு கூடுதலாக நீர் கிடைக்க செங்கல்பட்டு மகாலட்சுமிநகரில் உள்ள நீஞ்சல் மதகு வெள்ள பெருக்கின் போது திறக்கப்பட்டது தற்போது வரை மூடாமல் உள்ளது அதை உடனே மூட வேண்டும், அதே போல் நீஞ்சல் மதகு அகலபடுத்தி தூர் வார வேண்டும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வைத்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு உடனே வழங்க வேண்டும், காட்டு பன்றி தொல்லை அதிகமாக உள்ளது அதை கட்டுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், வடகால் பகுதியில் உள்ள ஏரியில் கலங்கல் அமைக்க வேண்டும், ஏரியை தூர் வார வேண்டும், அதே போல் நெல் மூட்டைகளை தேக்கி வைக்க குடோன் அமைத்து தர வேண்டும் என இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# LAMPOON உதவியுடன் கூடிய TMVR சிகிச்சையை தென் தமிழகத்தில் முதன் முறையாக மேற்கொண்டு சாதனை படைத்திருக்கும் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை

மதுரை, மே.1

LAMPOON உதவியுடன் கூடிய TMVR (டிரான்ஸ்கதீட்டர் மிட்ரல் வால்வு ரீபிளேஸ்மெண்ட்) சிகிச்சையை தென்தமிழகத்தில் முதன் முறையாக மேற்கொண்டு சாதனை படைத்திருக்கும் மீனாட்சி மிஷன் மருத்துவமனை




முன்பு இம்பிளாண்ட் செய்யப்பட்ட மிட்ரல் வால்வின் தரம் சீர்கெட்டதன் காரணமாக அதனை மாற்றுவது 75 வயதான நோயாளிக்கு அவசியமாக இருந்தது 65 வயதுக்கு மேற்பட்ட, இணை நோய்கள் உள்ள அல்லது முன்பு இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் ஒரு புதிய மிட்ரல் வால்வு தேவைப்படுகின்ற நோயாளிகளுக்கு டிரான்ஸ்கதீ ட்டர் மிட்ரல் வால்வு ரீபிளேஸ்மெண்ட் (TMVR) என்பது, ஒரு சிறந்த வரமாக கிடைக்கிறது.

2024: சென்னை அல்லாத தமிழ்நாட்டில் இதயவியலில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க சாதனையாக LAMPOON உதவியுடன் கூடிய TMVR செயல்முறையை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் வெற்றிகரமாக செய்திருக்கிறது. கதீட்டர் அடிப்படையிலான இந்த மேம்பட்ட உத்தி, முன்பே இம்பிளாண்ட் செய்யப்பட்ட மிட்ரல் வால்வை விரிவாக்கவும் அல்லது கீறி எடுக்கவும், புதிய வால்வை அதற்கு மாற்றாகப் பொருத்தவும் உதவுகிறது. முன்னாள் வங்கி அதிகாரியான 75 வயதான நபருக்கு இந்த அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. மிட்ரல் வால்வு மாற்றுவதற்காக 10 ஆண்டுகளுக்கு முன்பு திறந்தநிலை இருதய அறுவை சிகிச்சை இவருக்கு செய்யப்பட்டிருந்தது.

மிட்ரல் வால்வு என்பது, இதயத்திலுள்ள நான்கு வால்வுகளில் ஒன்றாகும். இடது இதய மேலறையிலிருந்து, இதயத்தின் பிரதான பம்ப்பிங் அறையான இதய கீழறைக்கு இரத்த ஓட்டத்தை இது ஏதுவாக்குகிறது. மிட்ரல் வால்வு, இரு leafletகளை கொண்டிருக்கிறது. இதயத்தின் வழியாக ஒரு திசையில் இரத்தம் பாய்வதை உறுதி செய்வதற்கு தமனியை திறப்பதும் இறுக்கமாக மூடுவதும் தான் இந்த மிட்ரல் leaflet களின் ஒரே நோக்கமாகும். சரியாக செயல்படாத மிட்ரல் வால்வு இருக்குமானால், அது நுரையீரலில் மிகை அழுத்தத்திற்கும், இதய விரிவாக்கத்திற்கும், ஏட்ரியல் fibrillationற்கும், இரத்த உறைகட்டிகளுக்கும்,இதய செயலிழப்பிற்கும் வழிவகுக்கக்கூடும்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இதயவியல் துறையின் தலைவர் டாக்டர். கணேசன், இதயவியல் துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். சிவக்குமார் மற்றும் இதய மயக்க மருந்தியல் துறையின் தலைவர் டாக்டர். குமார் ஆகியோர் தலைமையிலான சிகிச்சைக்குழு அதிக துல்லியத்தோடும், திறனோடும் இந்த சிக்கலான சிகிச்சைசெயல்முறையை வெற்றிகரமாக செய்திருக்கிறது. இந்தியாவில் டிரான்ஸ்கதீட்டர் எலக்ட்ரோகார்டியாலஜி துறையில் முதன்மை நிபுணர் என அறியப்படும் டாக்டர். ரவீந்தர் சிங் ராவ், இந்த செயல்முறையை மேற்பார்வையிட்டு, நிபுணத்துவ சிகிச்சை செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தார். இதற்குப் பிறகு சில நாட்கள் மருத்துவமனையில் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த இந்த நோயாளி, மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். மருத்துவ செயல்முறையுடன் தொடர்புடைய எந்த பிரச்சனைகளும் அவருக்கு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் தலைவர் டாக்டர். S. குருசங்கர் இந்நிகழ்வு குறித்து கூறியதாவது: "இச்சிறப்பான சாதனையை நிகழ்த்தியதற்காக எனது மனமார்ந்த பாராட்டுகளை மருத்துவர்கள் குழுவிற்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேம்பட்ட சிகிச்சை பராமரிப்பை வழங்குவதில் எமது தளராத அர்ப்பணிப்பே எமது நோயாளிகளின் நலனிற்காக நவீன உத்திகளையும், மேம்பட்ட மருத்துவ செயல்முறைகளையும் தொடர்ச்சியாக அறிமுகம் செய்வதற்கும், அவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கும் எங்களுக்கு வழிவகுத்திருக்கிறது. புத்தம் புதிய இதய சிகிச்சை செயல்முறைகளை அறிமுகம் செய்வதில் முன்னோடிகள் என அறியப்படும் நாங்கள், LAMPOON உதவியுடன் TVMR சிகிச்சை செயல்முறையை வெற்றிகரமாக செய்திருக்கும் சென்னை அல்லாத தமிழ்நாட்டின் முதல் மருத்துவமனை என மகிழ்ச்சியுடன் அறிவிப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். புத்தாக்கம் மற்றும் சிகிச்சையில் உயர்நேர்த்தியை உறுதி செய்வதில் எமது பொறுப்புறுதியை இந்த மைல்கல் நிகழ்வு கோடிட்டுக் காட்டுகிறது. இந்த புரட்சிகரமான அறுவை சிகிச்சையை செய்து சாதனை படைத்திருக்கும் இந்த ஒட்டுமொத்த நாட்டின் வெகுசில மருத்துவமனைகளுள் ஒன்றாக இது எங்களை நிலை நிறுத்தியிருக்கிறது."

மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் இதயவியல் துறையின் தலைவர் டாக்டர். கணேசன் இது தொடர்பாக விளக்கி கூறியதாவது: "இதயத்தின் வால்வு சுருங்குவதால், இரத்த ஓட்டத்தில் ஏற்பட்ட தடைக்கு தீர்வுகாண 10 ஆண்டுகளுக்கு முன்பு திறந்தநிலை இதய அறுவை சிகிச்சை இந்த நோயாளிக்கு செய்யப்பட்டது. எனினும், பொருத்தப்பட்ட வால்வின் தரம் காலப்போக்கில் சீர்கெட்டு மோசமாகியிருந்ததால் வால்வை மாற்றுவது தவிர்க்க முடியாததாக மாறியிருந்தது. நோயாளியின் முதிர்ந்த வயது மற்றும் திறந்தநிலை இதய அறுவைசிகிச்சை செய்த வரலாறு ஆகியவற்றை கருத்தில் கொள்கையில், அவருக்கு நேரடியாக TVMR சிகிச்சை செய்வது சாத்தியமாகியிருக்கவில்லை. எனவே, LAMPOON செயல்முறையை செய்வது என நாங்கள் முடிவு செய்தோம். ஏற்கனவே இருக்கும் வால்வில் கீறலிடுவதும், புதிய வால்வை பொருத்துவதற்காக அதன்பிறகு TVMR செயல்முறையை மேற்கொள்வதும் இச்சிகிச்சையில் இடம்பெற்றிருந்தன. LAMPOON செயல்முறையில், நோயாளியின் Groin பகுதி வழியாக நோயாளியின் இதயத்திற்கு செல்லும் இரத்தநாளங்கள் மூலம் இரு கதீட்டர்கள் நுழைக்கப்பட்டு, இதயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. கதீட்டரில் சுற்றி எடுத்துச் செல்லப்பட்ட மின்னியக்க வயரானது,

வால்வின் இதழை வெட்டி திறப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த செயல்முறைக்குப் பிறகு வழக்கமான TMVR சிகிச்சை இந்நோயாளிக்கு அளிக்கப்பட்டது. இந்த செயல்முறைக்குப் பிறகு இந்நோயாளி நலமுடன் இருக்கிறார் மற்றும் இயல்பான வாழ்க்கை செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் இதயவியல் துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். R. சிவக்குமார் பேசுகையில், "டிரான்ஸ்கதீட்டர் மிட்ரல் வால்வு ரீபிளேஸ்மெண்ட் (TMVR) என்பது, இதய இடையீட்டு சிகிச்சையில் ஒரு மேம்பாடாகும். மிட்ரல் வால்வு சரியாக செயல்படாததன் காரணமாக, அவதியுறும் நோயாளிகளுக்கு வழக்கமான திறந்த நிலை இதய அறுவை சிகிச்சைக்கு பதிலாக மிகக் குறைந்த ஊடுருவல் கொண்ட மாற்று செயல்முறையை இது வழங்குவதே இதற்கு காரணம். திறந்த நிலை இதய அறுவை சிகிச்சைகள் தேவைப்படுகின்ற வழக்கமான அறுவை சிகிச்சை செயல்முறைகள் போல் அல்லாமல், Groin பகுதியில் அல்லது மார்பில் ஒரு சிறிய கீறலின் வழியாக கதீட்டர் அடிப்படையிலான உத்திகளைப் பயன்படுத்தி TMVR செய்யப்படுகிறது. எனினும், முதிர்ந்த வயது, இணைநோய்கள் இருப்பது, அல்லது ஏற்கனவே இதய இடையீட்டு சிகிச்சைகள் செய்யப்பட்டிருப்பது ஆகிய காரணிகளினால் அத்தகைய நோயாளிகளுக்கு TMVR செயல்முறை கூட இடர் வாய்ப்புள்ளதாக இருக்கக் கூடும். இத்தகைய சூழலில் முன்புற தடுக்கிதழில் கீறல் செய்யப்படுகின்ற ஒரு மேம்பட்ட டிரான்ஸ் கதீட்டர் மின்னியக்க அறுவைசிகிச்சை உத்தி (LAMPOON) பயன்படுத்தப்படுகிறது. புதிய மிட்ரல் வால்வு தேவைப்படுகின்ற ஆனால், TMVR சிகிச்சையை மட்டும் தனித்து நேரடியாக செய்ய முடியாத நிலையில் உள்ள நோயாளிகளுக்கு சிறந்த வரமாக LAMPOON உத்தி உருவெடுத்திருக்கிறது, என்று கூறினார்.

இந்த சாதனை குறித்து விளக்குவதற்காக நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நிகழ்வின்போது மருத்துவ நிர்வாகி டாக்டர். B. கண்ணன், இதய மயக்க மருந்தியல் துறையின்தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். S. குமார், இதயவியல் துறையின்முதுநிலைநிபுணர்கள் டாக்டர். S. செல்வமணி, டாக்டர். M. சம்பத்குமார் மற்றும் டாக்டர். P. ஜெயபாண்டியன், இதய அறுவை சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். R.M. கிருஷ்ணன், இதய அறுவை சிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர் ராஜன், ஆகியோரும் உடனிருந்தனர்.

இதயம் தொடர்பான பல்வேறு பாதிப்புகளை துல்லியமாக கண்டறிந்து, கனிவுடன் சிகிச்சையளித்து குணப்படுத்துவதில் அனுபவமும், நிபுணத்துவமும் கொண்ட மருத்துவர்களுடன் மீனாட்சி மிஷன் மருத்துவமனை இயங்கி வருகிறது. இதயவியல் இடையீட்டு சிகிச்சை துறையில் நவீன உத்திகளை திறன்மிக்க சிறப்பு நிபுணர்கள் பயன்படுத்தி, மேம்பட்ட இதய நல சிகிச்சையை வழங்குகின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு நோயாளிக்கும் சிறப்பான சிகிச்சை விளைவுகள் உறுதி செய்யப்படுகின்றன.

# நரிக்குறவ மக்களுக்கு புதிய வகையான மரபணு கண்டுபிடிப்பு இளம் வயதில் இதயநோய் ஏற்படும் அபாயம்

சென்னை, மே.1

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் உயிர் வேதியியல் துறையை சேர்ந்த நிபுணர்கள், சென்னையை சேர்ந்த நரிக்குறவர் மக்களிடையே ஆய்வு ஒன்றை நடத்தினார்கள். அப்போது அவர்களின் உடலில் புதிய வகை மரபணு மாற்றத்தை கண்டுபிடித்தனர்.



இந்த புதிய வகை மரபணுவானது அல்காப்டோனூரியா அல்லது கருப்பு சிறுநீர் நோயை உருவாக்கும் தன்மை கொண்டது. இந்த புதிய வகை மரபணு தொடர்பாக ஆராய்ச்சி தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 3 நாட்கள் தொடர் மருத்துவ கல்வி திட்டம் மற்றும் பகுப்பாய்வு உயிர் வேதியியல் குறித்த பயிலரங்கு நடந்தது. இந்த பயிலரங்கில் நரிக்குறவ மக்களிடையே கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வகை மரபணு பற்றிய ஆய்வு அறிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது. இதில் நாடு முழுவதும் இருந்து 110 மருத்துவர்கள் பங்கேற்றனர்.

இந்த பயிலரங்கத்தில் அல்காப்டோனூரியா மரபணு மாற்றம் பற்றிய புத்தகமும் வெளியிடப்பட்டது.

இந்த பயிலரங்கத்தில் பேசிய மருத்துவர்கள் கூறியதாவது:

அல்காப்டோனூரியா நோயை தோற்றுவிக்கும் புதிய வகை மரபணு மாற்றம் கொண்டவர்கள், இளம் வயதிலேயே மூட்டுவலி மற்றும் இதயநோயால் பாதிக்கப்படும் அபாயம்உள்ளது. இவர்களுக்கு சிறுநீர் கருப்பு நிறத்தில் வெளியேறும். அல்லது காற்று பட்டவுடன் சிறுநீர் கருப்பு நிறத்தில் மாறும்.

இது உடலில் ஹோமோ ஜென்டிசிக் அமிலம் எனப்படும் ரசாயனத்தை உருவாக்கி உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இந்த மரபணு மாற்றமானது பரம்பரை வழியாக மிகவும் அரிதாகவே ஏற்படும். மரபணு பகுப்பாய்வு மூலம் இந்த நோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளித்தால் பெரிய அளவிலான பாதிப்பை தடுக்கலாம். மேலும் அவர்கள் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ முடியும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# தமிழகத்தில் பறக்கும் படை சோதனை: இதுவரை ரூ.1,309 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்



சென்னை, மே.1

பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு கடந்த மார்ச் 16ந் தேதி வெளியானது. அதில் இருந்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. எனவே பறக்கும்படை, நிலையான கண்காணிப்புக்குழுவின்சோதனைதொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 19ந் தேதி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து தமிழகத்தின் உள்மாவட்டங்களில் பறக்கும்படை, நிலையான கண்காணிப்புக்குழுவின் சோதனை திரும்பப் பெறப்பட்டது. கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் மட்டும் பறக்கும்படை மற்றும் நிலையான கண்காணிப்புக்குழு சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கிடையே கடந்த 28ந்தேதி வரை சோதனைகளில் பிடிக்கப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் குறித்த விவரங்களை தலைமை தேர்தல் அதிகாரிசத்யபிரதாசாகு வெளியிட்டுள்ளார். அதன்படி, ரூ.179.91 கோடி ரொக்கப் பணம், ரூ.8.65 கோடி மதிப்புள்ள மது வகைகள், ரூ.1.36 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள், ரூ.1,083.78 கோடி மதிப்புள்ள தங்கம் உள்ளிட்ட விலை உயர்ந்த நகைகள், ரூ.35.80 கோடி மதிப்புள்ள இலவச பொருட்கள் என ரூ.1,309.52 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

# பொள்ளாச்சியில் ஒரு டன் இளநீர் பண்ணை விலை ரூ.15,500 ஆக நிர்ணயம்



பொள்ளாச்சி, மே.1

பொள்ளாச்சி, ஆனைமலை தாலுகா பகுதிகளில் அதிகளவில் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. இங்கு விளையும் தேங்காய், இளநீர் உள்ளிட்ட பொருட்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அண்டை மாநிலமான கேரளாவுக்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போது கோடை வெயில் காரணமாக பொள்ளாச்சி, ஆனைமலை தாலுகாக்களில் ஒரு டன் இளநீரின் பண்ணை விலை ரூ.15 ஆயிரத்து 500 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆனைமலை இளநீர் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கூறியதாவது:

கடந்த சில வாரங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் இளநீரை விரும்பி பருகி வருகிறார்கள். இந்தவாரம் நல்ல, தரமான குட்டை, நெட்டை வீரிய ஓட்டுரக மரங்களின் இளநீர்விலை, கடந்த வார விலையை விட ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டு ரூ.39 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு டன் இளநீரின் விலை ரூ.15 ஆயிரத்து 500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இளநீர்வரத்து மிக மிக குறைவாக இருப்பதால் பண்ணைகளில் இளநீர் வாங்குவதில் வியாபாரிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. இதனால் கூடுதல் விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கி செல்கிறார்கள். கடுமையான இளநீர் தட்டுப்பாடு காரணமாக வரும் வாரத்தில் இளநீரின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. எனவே தென்னை விவசாயிகள் குறைந்த விலைக்கு இளநீரை விற்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# நாகை மீனவர்கள் மீது திடீர் தாக்குதல்: இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியம்



நாகை, மே.1

நாகைமாவட்டம்கோடியக்கரை அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள்திடீர்தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் முருகன் என்ற மீனவர் படுகாயமடைந்தார். அவரை சக மீனவர்கள் மீட்டு நாகை மருத்துவமனையில் அனுமதித்தனர். மீனவர்களை கட்டையால் தாக்கி அவர்களிடம் இருந்து ரூ.5 லட்சம் மதிப்பிலான வலைகள் மற்றும் ஜி.பி.எஸ். கருவிகளை இலங்கை கடற்கொள்ளையர்கள் பறித்துச் சென்றனர். மீனவர்கள் படகுகளை வழிமறித்து கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னை ஐகோர்ட்டுக்கு ஜீன் 2ம் தேதி வரை கோடை விடுமுறை

சென்னை, மே.1

சென்னை ஐகோர்ட்டு மற்றும் மதுரை கிளைக்கு ஆண்டு தோறும் மே மாதம் விடுமுறை விடுவது வழக்கம். அதன்படி வரும் மே 1ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறை காலத்தில் சென்னை ஐகோர்ட், ஐகோர்ட் மதுரை கிளையில் வழக்குகளை விசாரிக்க நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, ஐகோர்ட் தலைமை பதிவாளர் எம்.ஜோதிராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சென்னை ஐகோர்ட்டில் மே மாதம் 8, 9ம் தேதிகளில் நீதிபதிகள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, கே.குமரேஷ்பாபு, ஆர்.கலைமதி ஆகியோரும், 15, 16ம் தேதிகளில் நீதிபதிகள் பி.டி.ஆஷா, ஆர்.சக்திவேல், என்.செந்தில் குமார் ஆகியோரும், 22, 23ம்தேதிகளில்நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், சி.சரவணன், பி.பி.பாலாஜி ஆகியோரும், 29, 30ம் தேதிகளில் நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ.சத்யநாராயண பிரசாத், எஸ்.சவுந்தர், வி.லட்சுமிநாராயணன் ஆகியோரும் அவசரவழக்குகளை விடுமுறை காலத்தில் விசாரிப்பார்கள்.

இதேபோல ஐகோர்ட் மதுரை கிளையில் மே 8, 9ம் தேதிகளில் நீதிபதிகள் பி.வேல்முருகன், அப்துல் குத்தூஸ், பி.தனபால் ஆகியோரும், 15,16ம் தேதிகளில் பி.வேல்முருகன், பி.வடமலை, கே.ராஜசேகர் ஆகியோரும், 22, 23ம் தேதிகளில் நீதிபதிகள் ஆர்.என்.மஞ்சுளா, எஸ்.ஸ்ரீமதி, சி.குமரப்பன் ஆகியோரும், 29, 30ம்தேதிகளில்நீதிபதிகள் ஆர்.விஜயகுமார், எல்.விக்டோரியா கவுரி, ஜி.அருள்முருகன் ஆகியோரும் அவசர வழக்குகளை விசாரிப்பார்கள்.

வாரம்தோறும் திங்கள், செவ்வாய் கிழமைகளில் வழக்குகளை தாக்கல் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்நிலை பள்ளியை மூட எதிர்ப்பு தெரிவித்து கலெக்டர் அலுவலகத்தில் திரண்ட மாணவர்கள், பொதுமக்கள்



நெல்லை, மே.1

நெல்லை மாவட்டம் நாங்குநேரி தாலுகா வெங்கட்ராயபுரம் பகுதியில் கடந்த 1990ம் ஆண்டு நடுநிலைப்பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இந்த பள்ளியில் வெங்கட்ராயபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் 1990களில் பஸ் போக்குவரத்து உள்ளிட்டவைகள் இல்லாத நேரத்திலும், அந்த பள்ளியில் 10க்கும் மேற்பட்ட கிராமத்தை சேர்ந்த மாணவ மாணவிகள் படித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த ஆண்டுக்கான தேர்வுகள் முடிந்து விட்ட நிலையில் பள்ளியில் போதுமான நிதி இல்லை எனக் கூறி அடுத்த ஆண்டு முதல் பள்ளி செயல்படாது என பள்ளி நிர்வாகத்தின் மூலம் மாணவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனை அறிந்த ஊர்மக்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பள்ளியை நிறுத்தக்கூடாது. தொடர்ந்து செயல்படுவதற்கு தங்களால் இயன்ற நிதியை தருகிறோம் என தெரிவித்த நிலையிலும் பள்ளி செயல்படாது என அறிவித்துள்ளனர். இந்த நிலையில் ஊர் பொதுமக்கள் மற்றும் பழைய மாணவர்கள், தற்போது படிக்கும் மாணவர்கள் என 50க்கும் மேற்பட்டோர் நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு திரண்டு வந்து கோரிக்கை மனு ஒன்றை அளித்துள்ளனர். அதில் அவர்கள், நடுநிலை பள்ளியாக இருந்த இந்த பள்ளி தற்போது உயர்நிலைப் பள்ளியாக செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது படித்து வருகின்றனர். சுமார் 34 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் நிலையில் பள்ளி நிர்வாகத்தின் இந்த திடீர் அறிவிப்பால் 9ம் வகுப்பு முடித்த மாணவர்கள் 10ம் வகுப்பு வேறு பள்ளியில் சேர்வது மிகவும் கடினம். எனவே இந்த பள்ளியை தொடர்ந்து நடத்த வேண்டும். அரசு இந்த பள்ளியை கையகப்படுத்தி அரசு பள்ளியாக இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அதில் முன் வைத்துள்ளனர். இதற்கிடையே தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ள நிலையில் மாவட்ட கலெக்டரை நேரில் சந்தித்து மனு அளிக்க முடியாத சூழல் காரணமாக கலெக்டர் அலுவலகம் முன்பிருந்த பெட்டியில் தங்களது கோரிக்கை மனுவை போட்டு சென்றுள்ளனர்.

# திருச்சி விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் நிபுணர்களுடன் போலீசார் அதிரடி சோதனை



கே.கே. நகர்: மே.1


திருச்சி விமான நிலையத்தில் இருந்து வெளிநாடுகளான மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், ஓமன், துபாய், அபுதாபி, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது. இவை தவிர உள்நாட்டு விமான சேவைகளாக ஐதராபாத், பெங்களூரு, சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இயக்கப்படும் விமானங்களை பயணிகள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் திருச்சி விமான நிலையத்திற்கு இன்று காலை முகநூல் பகுதியில் தனிநபர் ஒருவர் திருச்சி விமான நிலையத்தில் விரைவில் வெடிகுண்டு வெடிக்க இருப்பதாகவும் 4 இடங்களில் இந்த வெடிகுண்டு வைத்திருப்பதாகவும் தகவல் அனுப்பியதாக தெரிகிறது.

இதனை அறிந்த மத்திய தொழில்பாதுகாப்புபடையினர் மற்றும் விமான நிலைய அதிகாரிகள் உடனடியாக அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். வெடிகுண்டு நிபுணர் குழுவினர் உடனடியாக விமான நிலையத்திற்கு வருகை தந்து சோதனை செய்து வருகின்றனர்.

பயணிகளின் வாகனங்கள் மற்றும் உடைமைகள் தீவிர சோதனைக்கு பின்பு உள்ளே அனுமதிக்கப்படுகிறது. இதனால் திருச்சி விமான நிலையம் பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.

# கொளுத்தும் கோடை வெயில் காரணமாக கோவையில் பம்ப்செட் விற்பனை 25 சதவீதம் அதிகரிப்பு



கோவை, மே.1

தரமான பம்ப்செட் தயாரிப்பில் உலகளவில் கோவை மாவட்ட பம்ப்செட் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படும் நிலையில் வீடு மற்றும் விவசாய பயன்பாட்டுக்கான பம்ப்செட் தேவை அதிகரித்துள்ளதாக தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இந்திய பம்ப்செட் தயாரிப்பாளர்கள் கூறியதாவது:

தேசிய அளவிலான பம்ப்செட் தேவையில் கோவை மாவட்ட தொழில் நிறுவனங்கள் 50 சதவீதத்துக்கும் மேல் பங்களிப்பு கொண்டுள்ளன. ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் தொடங்கி ஆகஸ்டு மாதம் வரை பம்ப்செட் சீசனாகும். இந்த ஆண்டு ஜனவரி 2வது வாரத்திலேயே பம்ப்செட் உற்பத்தி தொடங்கி விட்டது. தொடர்ந்து நிலையான வளர்ச்சியை பதிவு செய்து வருகிறது. வெயில் தாக்கம் அதிகம் காணப்படுவதால் விவசாய பயன்பாட்டுக்கான தேவை கணிசமாக அதிகரித்துள்ளது.

வீடுகளில் பயன்படுத்தப்படும் பம்ப்செட் தேவையும் உயர்ந்துள்ளது. கோவை மாவட்டத்தை போல் குஜராத்தில் பம்ப்செட் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டாலும், நாடு முழுவதும் வாடிக்கையாளர்கள் கோவை பம்ப்செட் பொருட்களை வாங்கி அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போதைய நிலவரப்படி விவசாய பம்ப்செட் தேவை 15 சதவீதம் வரையும், வீடுகளுக்கான பம்ப்செட் 10 சதவீதம் வரையும் அதிகரித்துள்ளது. மே மாதத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்பதால் பம்ப்செட் தேவை மேலும் உயரும். இந்த ஆண்டு சீசன் ஆகஸ்டு அல்லது செப்டம்பர் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

கோவை பம்ப்செட் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிப்பாளர்கள் சங்கத்தினர் கூறும் போது, கோவையில் உள்ள பெரும்பாலான குறுந்தொழில் நிறுவனங்களில் வீடுகளுக்கு தேவையான பம்ப் செட் பொருட்களை அதிகம் தயாரிக்கப்படுகிறது. தற்போது நிலையான தேவை காணப்படுகிறது. பெரும்பாலான அரசுத்துறைகளில் பெரிய நிறுவனங்களின் பம்ப்செட் பொருட்களே கொள்முதல் செய்யப்படுகிறது. குறுந்தொழில் நிறுவனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறோம் என்றனர்.

# கோடை வெயில் கொளுத்துவதால் சிறுநீர்பாதை தொற்று அதிகரிக்கிறது டாக்டர்கள் எச்சரிக்கை



சென்னை, மே.1

தமிழகத்தில் கோடை வெயில் உச்சத்தை எட்டி உள்ள நிலையில், பகல் நேரத்தில் வெளியில் செல்வதைத் தவிா்க்குமாறு சுகாதாரத்துறை தரப்பில் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டு உள்ளன.

இதனிடையே, சின்னம்மை, உயா் ரத்த அழுத்தம், நீா்ச்சத்து இழப்பு, சரும பாதிப்புகள் பரவலாக மக்களிடையே காணப்படுகின்றன. இந்நிலையில், நீா்க்கடுப்பு எனப்படும் சிறுநீா்ப்பாதை தொற்று அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.

அத்தகைய பாதிப்புக்காக நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்டோா் மருத்துவமனைகளை நாடுவதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து பொது நல மருத்துவநிபுணா் டாக்டா் அ.ப.பரூக் அப்துல்லா கூறியதாவது:

உடலில்உள்ளரத்தத்தை சுத்திகரித்து, அதில் உள்ள தேவையற்ற கழிவுகளை வெளியேற்றும் பணியை சிறுநீரகங்கள் செய்கின்றன. ஒவ்வொரு சிறுநீரகத்திலும் தலா பத்து லட்சம் நெப்ரான்கள் (ரத்த நுண் சுத்திகரிப்பான்கள்) உள்ளன. அங்கிருந்து உருவாகும் கழிவுகள் யூரிடா் எனப்படும் குழாய் கள் மூலம் சிறுநீா்ப்பையில் சேகரிக்கப்படுகின்றன.

பின்னர் அவை யூரித்ரா எனப்படும் குழாய் வழியே சிறு நீராக வெளியேறுகிறது. இந்த கட்டமைப்பைத் தான் சிறுநீா்ப்பாதை என அழைக்கிறோம். இதில் ஏதேனும் கிருமித் தொற்று ஏற்படும் போது சிறுநீா் கழிப்பதில் எரிச்சல், வலி, சிரமங்கள் காணப்படும். இதை அலட்சியப்படுத்தினால், கிருமிகள் சிறுநீரகங்களைத் தாக்கி பெரியஅளவில்பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

கோடை காலத்தில் உடலில் போதிய நீா்ச்சத்து இல்லாவிடில் சிறுநீா்ப்பாதையில் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

சமீபகாலமாக அத்தகைய பிரச்சினைகளுடன் பலா் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக வருகின்றனா். அதிலும், பெண்களில் பலா் புறச்சூழ்நிலை காரணமாக சிறுநீரை உரிய நேரத்தில் வெளியேற்ற இயலாமல் இருப்பதால் அவா்களில் பெரும்பாலானோருக்கு கிருமித் தொற்று ஏற்படுகிறது.

இதைத் தவிா்க்க நாளொன்றுக்கு குறைந்தது மூன்று முதல் நான்கு லிட்டா் வரை தண்ணீா், இளநீா், மோா், எலுமிச்சை சாறை அருந்தலாம்.

தனி நபா் சுகாதாரம் பேணுவது அவசியம். அதேபோன்று, சிறுநீா் கழிக்கும் இடத்தையும், கைகளையும் சானிடைசா் கொண்டு சுத்தம் செய்தால் கிருமித் தொற்று வராமல் தடுக்கலாம்.

அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல் மருத்துவரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொண்டால் சிறுநீரகங்களை பாதுகாக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆற்றில் தண்ணீரை கண்டதும் ஆனந்த குளியலிட்ட யானை சமூக வலைதளத்தில் வீடியோ வைரல்



ஊட்டி, மே.1

கோடை மழை பெய்யாததால் நீலகிரி மாவட்டம் முழுவதுமே கோடை வெயில் வெளுத்து வாங்குகிறது. இதன் ஒரு பகுதியாக முதுமலை புலிகள் காப்பகம் பகுதியில் வெயிலின் தாக்கம் மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வனவிலங்குகள் நீர்நிலைகளை தேடி இடம் பெயர தொடங்கி உள்ளன. மேலும் முதுமலை புலிகள் காப்பகம் தற்போது வறண்டு காணப்படுகிறது. அங்கு பச்சைப்பசேல்பசுமையைபார்ப்பது அரிதாக உள்ளது. முதுமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட தெப்பக்காடு யானைகள் வளர்ப்பு முகாமில் உள்ள சுமார் 25க்கும் மேற்பட்ட கும்கி யானைகள், தண்ணீர் பற்றாக்குறை மற்றும் கட்டிடம் கட்டுமான பணிகள் காரணமாக அங்குள்ள 4 பகுதிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நீலகிரியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால், தெப்பக்காடு கும்கி யானைகளை பாகன்கள் தினமும் ஆற்றுக்கு அழைத்துச்சென்று குளிப்பாட்டி அழைத்து வருகின்றனர். அதன்படி நேற்று கும்கி யானைகள் மாயார் ஆற்றுக்கு அழைத்து வரப்பட்டது. அப்போது தண்ணீரை கண்டதும் குதூகலம் அடைந்த யானைகள், ஆற்றுக்குள் இறங்கி ஆனந்த குளியல் போட்டு மகிழ்ந்தன.

மேலும் அவை ஆழமான பகுதிகளுக்குள் சென்று, தும்பிக்கையால் தண்ணீரை உறிஞ்சி உடல் முழுவதும் வாரி இறைத்து உற்சாக குளியல் போட்டன. முதுமலை மாயார் ஆற்றுக்கு பாகனை சுமந்து வந்த யானை, ஆற்றுக்குள் இறங்கி ஆனந்த குளியல் போடுவது தொடர்பாக வீடியோ, சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

1.5.2024

## 'மலையாளி ஃப்ரம் இந்தியா' டீஸர்: நிவின் பாலியின் பிரச்சனை




முத்துக்குமார் தயாரிப்பில் செல்வம் மாதப்பன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் புதிய படம் 'படிக்காத பக்கங்கள்.' யாஷிகா ஆனந்த் முதன்மை தோற்றத்தில் நடித்துள்ள இந்த படத்தில் ஜார்ஜ் மரியான் மற்றும் லொள்ளு சபா மனோகர் நடித்துள்ளனர். இந்த படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய வைரமுத்து, "இந்தப் 'படிக்காத பக்கங்கள்' இசை வெளியீட்டு விழா மிகவும் முக்கியமான நிகழ்வு. ஒரு பாடலில், இசை பெரிதா, மொழி பெரிதா என்பது ஒரு பெரிய சிக்கலாகப் பேசப்பட்டு வருகிறது. இதில் என்ன சந்தேகம்? இசை எவ்வளவு பெரிதோ, அவ்வளவு பெரிது மொழி. மொழி எவ்வளவு பெரிதோ, அவ்வளவு பெரிது இசை. இரண்டும் கூடினால்தான் அதற்குப் பாட்டு என்று பொருள்." "சில நேரங்களில், இசையை விட மொழி சிறந்ததாகவும், சில நேரங்களில், மொழி சிறந்ததாகவும் திகழ்கிற சந்தர்ப்பங்கள் உண்டு. இதைப் புரிந்து கொண்டவன் ஞானி. இதைப் புரிந்து கொள்ளாதவன் அஞ்ஞானி." "பாட்டுக்குப் பெயர் வைப்பது இசையா, மொழியா? பாட்டுக்குப் பெயர் வைத்தது மொழிதான். அதற்கு அழகு செய்தது இசை, அபிநயம் செய்தது இசை, அதை மறுக்க முடியாது. இசையும் மொழியும் பரஸ்பரம் செய்து கொள்ளும் போதுதான் கலை வெற்றி பெறுகிறது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்," என்றார்.



## இசை பெரிதா? மொழி பெரிதா? வைரமுத்து விளக்கம்

அறிமுக இயக்குநர் தன்ராஜ் இயக்கத்தில், சமுத்திரக்கனி நடித்திருக்கும் புதிய படம் ராமம் ராகவம். தயாரிப்பளர் பிருத்தவி போலவரபு தயாரிப்பில் உருவாகி இருக்கும் ராமம் ராகவம் படத்தின் டீசர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்ட இயக்குநர் பாலா பேசும் போது, "சமுத்திரக்கனியின் மாபெரும் ரசிகனாக வந்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நடிகனாக அவர் நிரூபித்து விட்டார். அவருடைய உழைப்பிற்கு நான் ரசிகன். கடுமையாக உழைக்கக்கூடியவர்."

"மற்றவர்களுக்கு உதவக்கூடிய அவருடைய தன்மை எனக்கு வியப்பாக இருக்கும். உதவுவதில் அவருக்கு பெரிய மனசு இருக்கு. இந்த படம் வெற்றி பெற என் வாழ்த்துகள்," என்று தெரிவித்தார்.

## சமுத்திரகனியின் உதவும் தன்மை எனக்கு வியப்பாக இருக்கும் இயக்குநர் பாலா



பாலா இயக்கத்தில் உருவாகி வரும் படம் வணங்கான். படத்தில் முதலில் சூர்யா கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகி பின்னர் சில காரணங்களால் படத்தில் இருந்து அவர் விலகினார். பாலா இதற்கு முன் துருவ் விக்ரமை வைத்து இயக்கிய வர்மா திரைப்படமும் பாதியிலே கைவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து சூர்யாவுக்கு பதிலாக அருண்விஜய் படத்தில் இணைந்து நடிக்க தொடங்கினார். சுரேஷ் காமாட்சி தயாரிப்பில் ஜி.வி. பிரகாஷ் படத்துக்கு இசையமைத்துள்ளார். தீவிரமாக நடந்து வந்த இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிகட்ட படப்பிடிப்பு பணிகளில் இருக்கிறது என போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அருண் விஜயுடன் மமிதா பைஜூ, ரோஷினி பிரகாஷ், சமுத்திரகனி, மிஷ்கின் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

## விளையாட்டு வீட்டுக்கு நாட்டுக்கு உயிருக்கு நல்லது குரங்கு பெடல் டிரைலர்




சிவகார்த்திகேயன் தற்பொழுது அமரன் மற்றும் ஏ.ஆர் முருகதாஸ் இயக்கும் திரைப்படத்திலும் நடித்து வருகிறார். நடிப்பது மட்டுமல்லாமல் சிவகார்த்திகேயன் ப்ரொடக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின் கீழ் பல வெற்றி படங்களை தயாரித்தும் வருகிறார்.

சிவகார்த்திகேயன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் வெளிவந்த கனா, அருவி, டாக்டர், டான் போன்ற திரைப்படங்கள் வெற்றி பெற்றன. தற்போது சூரி நடிக்கும் கொட்டுக்காளி என்ற படத்தை சிவகார்த்திகேயன் தயாரித்து வருகிறார். இப்படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பாராட்டை பெற்றுள்ளது. விரைவில் இத்திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதைதொடர்ந்து 'குரங்கு பெடல்' படத்தை அடுத்து எஸ்கே ப்ரொடக்ஷன் தயாரித்துள்ளது. கமலக்கண்ணன் இப்படத்தை இயக்கியுள்ளார் இதற்கு முன் இவர் 'வட்டம்' மற்றும் 'மதுபான கடை' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

காளி வெங்கட் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இத்திரைப்படம் ராசி அழகப்பன் எழுதிய சிறுக்கதையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது. கிப்ரான் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். இப்படம் வரும் மே மாதம் 3 ஆம் தேதி வெளியாகவுள்ள நிலையில் படத்தின் டிரெயிலர் தற்பொழுது வெளியாகியுள்ளது.

கோடை விடுமுறையில் நாம் சிறுவயதில் செய்த குறும்பையும் விளையாட்டையும் கண் முன் காட்சி படுத்தியுள்ளனர். 5 நண்பர்கள் அவர்களது கோடை விடுமுறையை மகிழ்ச்சியாக செலவிடும் காட்சிகளும் அதில் யார் முதலில் சைக்கிள் ஓட்ட கத்துக் கொள்கிறார்கள போன்ற காட்சிகள் டிரைலரில் இடம் பெற்றுள்ளது.

சைக்கிள் ஓட்டுவதற்காக் ஒரு சிறுவன் எவ்வளவு முயற்சிகளை செய்கிறான் அதற்கடுத்து என்ன நடந்தது என டிரைலர் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்கிறது.

## 'சண்டையில் சாவுறதுதான் வீரம்ன்னு சொல்லி இருக்காங்க' அதிரடியான 'ரசவாதி' டிரைலர்




'மௌனகுரு', 'மகாமுனி' படங்களை இயக்கி தமிழ் திரையுலகில் கவனம் பெற்றவர் இயக்குனர் சாந்தகுமார். இவர் இயக்கியுள்ள மூன்றாவது படத்தில் அர்ஜுன் தாஸ் கதாநாயகனாக நடிக்கிறார். சமீபத்தில் பிஜாய் நம்பியார் இயக்கத்தில் அர்ஜூன் தாஸ் மற்றும் காளிதாஸ் ஜெயராம் இணைந்து 'போர்' என்ற படத்தில் நடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தன்யா ரவிச்சந்திரன் கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தை 'டிஎன்ஏ மெக்கானிக் கம்பெனி' தயாரிக்கிறது. இப்படத்திற்கு 'ரசவாதி' என்று தலைப்பிடப்பட்டது.

இதில், ரேஷ்மா வெங்கடேஷ், சுஜித் ஷங்கர், ஜிஎம் சுந்தர், எஸ். ரம்யா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். தமன் இசையமைக்கும் இப்படத்திற்கு சிவா ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது. ஜனவரி மாதம் இப்படத்தின் டீசர் வெளியாகி மக்கள் கவனத்தை பெற்றது. அதைத்தொடர்ந்து தற்பொழுது படத்தின் டிரெயிலர் வெளியாகியுள்ளது . படத்தின் டிரெயிலரை திரைத்துறை பிரபலமான லோகேஷ் கனகராஜ், அனிருத், கார்த்தி, கார்த்திக் சுப்பராஜ், துல்கர் சல்மான், எஸ்.ஆர் பிரபு அவர்களின் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டனர். படம் வரும் மே 10 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

அர்ஜூன் தாஸ் கதாப்பாத்திரத்தின் மூன்று காலக்கட்டத்துடைய வாழ்க்கை இப்படத்தில் இடம்பெற்றுள்ளது. ரசவாதி படத்தின் டிரெயிலர் இணையத்தில் வைரலாகி வருகிறது.மௌனகுரு மற்றும் மகாமுனி வெற்றியைத் தொடர்ந்து இப்படமும் வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'ரீ ரிலீஸ்' க்கு தயாராகும் விஜய் சேதுபதி படங்கள்



தமிழ் சினிமாவில் தற்போது "ரீரிலீஸ்" படங்கள் தியேட்டர்களில் நன்றாக ஓடி கொண்டிருக்கிறது. 'வாரணம் ஆயிரம்', 'வேட்டையாடு விளையாடு', '3', 'விண்ணைத் தாண்டி வருவாயா' உள்ளிட்ட படங்கள் வெற்றிகரமாக ஓடி வருகின்றன. இந்நிலையில் சமீபத்தில் தரணி இயக்கத்தில் விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடிப்பில் உருவான 'கில்லி' படம் "ரீ ரிலீஸ்" செய்யப்பட்டு மிகப்பெரும் வசூல் சாதனை செய்தது. இதையடுத்து, மே 1 ந்தேதி அஜித்தின் பிறந்தநாளை யொட்டி "பில்லா" ,மற்றும் "தீனா" ஆகிய படங்கள் 'ரீ ரிலீஸ்' செய்யப்பட் உள்ளன. இந்நிலையில் விஜய் சேதுபதி நடித்து வெற்றிகரமாக ஓடிய படங்களும் தற்போது 'ரீ ரிலீஸ்' செய்ய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. கடந்த 2012 ம் ஆண்டு விஜய் சேதுபதி நடித்த 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்', "இதற்குதானே ஆசைப் பட்டாய் பாலகுமாரா" ஆகிய 2 படங்களும் விரைவில் 'ரீ ரிலீஸ்' செய்யப்பட உள்ளன.

## ஐ.பி.எல். புள்ளிப்பட்டியல்: 2வது இடத்தில் நீடிக்கிறது கொல்கத்தா



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதுவரை47லீக்ஆட்டங்கள்நடைபெற்றுள்ளன.

இந்நிலையில், ஐ.பி.எல். புள்ளிப்பட்டியலில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 16 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 12 புள்ளிகள் பெற்று 2வது இடத்தில் நீடிக்கிறது.

சென்னை சூப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் டெல்லி கேப்பிடல்ஸ் அணிகள் தலா 10 புள்ளிகள் பெற்று 3, 4, 5, 6வது இடங்களில் உள்ளன.

குஜராத் டைட்டன்ஸ் அணி 8 புள்ளிகளுடன் 7வது இடத்தில் உள்ளது.

பஞ்சாப் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்ரஸ் அணிகள் தலா 3 வெற்றியுடன் 6 புள்ளிகள் பெற்று 8, 9, 10வது இடங்களில் உள்ளன.

## மும்பைக்கு எதிராக அதிவேக புயல் மயங்க் யாதவ் களம் இறங்குகிறார்



ஐபிஎல் கிரிக்கெட்டில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிக்காக மயங்க் அகர்வால் விளையாடி வருகிறார். இவர் இரண்டு போட்டிகளில் களம் இறங்கி அபாரமான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். 155 கி.மீட்டர் வேகத்தில் பந்து வீசி எதிரணி பேட்ஸ்மேன்களை மிரட்டினார். அதிவேகமாக பந்து வீசினாலும், துல்லியமாக பந்து வீசினார். இதனால் எதிரணி பேட்ஸ்மேன்கள் இவரது பந்தில் ரன்கள் குவிக்க திணறினார். இரண்டு போட்டிகளில் தலா மூன்று விக்கெட்டுகள் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை வென்றார். ஆனால், 3வது போட்டியில் ஒரு ஓவர் வீசிய நிலையில் காயம் காரணமாக வெளியேறினார். இந்த நிலையில் நாளை மும்பை இந்தியன்ஸ்க்கு எதிரான போட்டியில் விளையாட அனைத்து வகையிலான டெஸ்டிலும் தேர்ச்சி பெற்று விட்டனர் என லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர்கள் மோர்கல் தெரிவித்துள்ளார். புள்ளிகள் பட்டியலில் லக்னோ 9 போட்டிகளில் விளையாடி 5ல் வெற்றி பெற்று 5வது இடத்தில் உள்ளது.

## அடுத்த ஐபிஎல் சீசன் ஏலத்தில் அஷ்வின் விற்கப்படாமல் கூட போகலாம் சேவாக்




ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் ராஜஸ்தான ராயல்ஸ் அணியில் தமிழக சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் இதுவரை 8 போட்டிகளில் விளையாடி வெறும் இரண்டு விக்கெட்டுகளை மட்டுமே வீழ்த்தியுள்ளார்.

அஷ்வின் ஓவருக்கு 9 ரன்களுக்கு மேல் விட்டுக்கொடுத்தும் விக்கெட்டுகளை வீழ்த்த முடியாமல் தவித்து வருகிறார்.

இந்நிலையில் அஸ்வினின் பந்துவீச்சு இந்திய அணியின் முன்னாள் வீரரான சேவாக் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர், "ரன்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று முயற்சிக்கும் அஷ்வின் விக்கெட் வீழ்த்தும் பந்துகளை தவிர்த்து வருகிறார். ரன்களை விட்டுக் கொடுத்தாலும் விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டும் என்று முனைப்புடன் அவர் பந்து வீசுவதில்லை. எனவே என்னை பொறுத்தவரை இனிவரும் போட்டிகளில் நான் அவரை சேர்க்க மாட்டேன். சொல்லப் போனால் அடுத்த சீசனுக்கு அவர் ஏலத்தில் விற்கப்படாமல் கூட போகலாம் என்று தோன்றுகிறது" என்று அவர் தெரிவித்தார்.

## மேட்ரிட் ஓபன் டென்னிஸ்: காலிறுதிக்கு முன்னேறினர் ஸ்வியாடெக், ரிபாகினா



மேட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது.

இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3வது சுற்று ஆட்டத்தில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக், ஸ்பெயின் வீராங்கனை சாரா டோர்மாவை எதிர்கொண்டார்.

இதில் நம்பர் 1 வீராங்கனையான ஸ்வியாடெக் 61, 60 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றிபெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல், கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரிபாகினா, செக் வீராங்கனை சாரா பிஜ்லெக்குடன் மோதினார். இதில் ரிபாகினா 61,63என்றநேர்செட்களில்வென்றுகாலிறுதிக்குமுன்னேறினார்.

இதேபோல் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா, துனீசியாவின் ஒன்ஸ் ஜபேர் ஆகியோரும் காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

## ஐ.பி.எல். 2024: பில் சால்ட் அதிரடியால் டெல்லியை சுலபமாக வீழ்த்திய கொல்கத்தா



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதுகின்றன. கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டியில் டாஸ் வென்ற டெல்லி அணி முதலில் பேட்டிங் தேர்வு செய்தது.

பேட்டிங்கை துவங்கிய டெல்லி அணிக்கு துவக்க வீரர்களான பிரித்வி ஷா மற்றும் ஜேக் ஃபிரேசர் மெக்கர்க் முறையே 13 மற்றும் 12 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அபிஷேக் பொரெல் 18 ரன்களில் ஆட்டமிழக்க, ஷாய் ஹோப் 6 ரன்களில் ஆட்டமிழந்தார்.

கேப்டன் ரிஷப் பண்ட் 20 பந்துகளில் 27 ரன்களை சேர்த்து ஆட்டமிழந்தார். இவருடன் ஆடிய அக்சர் பட்டேல் 15 ரன்களில் ஆட்டமிழந்தார். கடைசியில் நிதானமாக விளையாடிய குல்தீப் யாதவ் 34 ரன்களை குவித்தார். போட்டி முடிவில் டெல்லி அணி 9 விக்கெட்டுகளை இழந்து 153 ரன்களை சேர்த்தது. 154 ரன்களை துரத்திய கொல்கத்தா அணிக்கு பில் சால்ட் மற்றும் சுனில் நரைன் சிறப்பான துவக்கத்தை கொடுத்தனர். இருவரும் முறையே 68 மற்றும் 15 ரன்களை குவித்தனர். அடுத்து வந்த ரிங்கு சிங் 11 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இவரை தொடர்ந்து களமிறங்கிய கேப்டன் ஸ்ரேயஸ் அய்யர் மற்றும் வெங்கடேஷ் அய்யர் சிறப்பாக ஆடினர். இருவரும் முறையே 33 மற்றும் 26 ரன்களை குவித்தனர். இதன் காரணமாக கொல்கத்தா அணி 16.3 ஓவர்களில் மூன்று விக்கெட்டுகளை இழந்து 157 ரன்களை குவித்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டெல்லி சார்பில் அக்சர் பட்டேல் இரண்டு விக்கெட்டுகளையும், வில்லியம்ஸ் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

## ஐ.பி.எல். 2024: பந்துவீச்சாளர்கள் மிரட்டல் கொல்கத்தாவுக்கு 154 ரன்களை இலக்காக நிர்ணயித்த டெல்லி

ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதுகின்றன. கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டியில் டாஸ் வென்ற டெல்லி அணி முதலில் பேட்டிங் தேர்வு செய்தது. பேட்டிங்கை துவங்கிய டெல்லி அணிக்கு துவக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் துவக்க வீரர்களான பிரித்வி ஷா மற்றும் ஜேக் ஃபிரேசர் மெக்கர்க் முறையே 13 மற்றும் 12 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அபிஷேக் பொரெல் 18 ரன்களில் ஆட்டமிழக்க, ஷாய் ஹோப் 6 ரன்களில் ஆட்டமிழந்தார். கேப்டன் ரிஷப் பண்ட் 20 பந்துகளில் 27 ரன்களை சேர்த்து ஆட்டமிழந்தார். இவருடன் ஆடிய அக்சர் பட்டேல் 15 ரன்களில் ஆட்டமிழந்தார். கடைசியில் நிதானமாக விளையாடிய குல்தீப் யாதவ் 34 ரன்களை குவித்தார். போட்டி முடிவில் டெல்லி அணி 9 விக்கெட்டுகளை இழந்து 153 ரன்களை சேர்த்தது. கொல்கத்தா சார்பில் சிறப்பாக பந்துவீசிய வருண் சக்ரவர்த்தி மூன்று விக்கெட்டுகளையும், வைபவ் அரோரா மற்றும் ஹர்ஷித் ரானா தலா இரண்டு விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டார்க், சுனில் நரைன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.



**ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்**

**விளக்கம்:**

**தீய சொற்களைத் தவறியும் தம்முடைய வாயால் சொல்லும் குற்றம், ஒழுக்கம் உடையவர்க்குப் பொருந்தாததாகும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.